# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>MCOP. No.1000/2016</u>

2025-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 28-ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.1 வது** நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தேவசுந்தரி | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ.1, இறப்பு சான்று நகல் ம.சா.ஆ.2, பிரேத கூராய்வு அறிக்கை நகல் ம.சா.ஆ.3, வாரிசு சான்று நகல் ம.சா.ஆ.4, 1 முதல் 4 மனுதாரர்கள் ஆதார் அட்டை நகல் முறையே ம.சா.ஆ.5 முதல் ம.சா.ஆ.8, 5ம் மனுதாரரின் இறப்பு சான்று நகல் ம.சா.ஆ.9, 7ம் மனுதாரர் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.10, 5ம் மனுதாரர் வாரிசு சான்று நகல் ம.சா.ஆ.11,

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை:</u>**

விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது. விபத்து அன்று காலை என்கணவர் வீட்டிலிருந்து புறப்படும் போது நான் அவரை பார்க்கவில்லை. என்கணவருக்கு மோட்டார் சைக்கிள் ஓட்ட ஓட்டுநர் உரிமம் இல்லை. என்கணவர் ஓட்டிசென்ற மோட்டார் சைக்கிள் குணசேகரனுடையதாகும். என்கணவருக்கு தலையில் ஏற்பட்ட காயம் தான் இறந்து விட்டார் என்றால் எனக்கு தெரியாது. காவல்நிலையத்தில் நான் புகார்

கொடுக்கவில்லை. நான் விபத்து சம்மந்தமாக வேறு நீதிமன்றத்தில் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. என்கணவருக்கு ஆதார் அட்டை கிடையாது. என்கணவர் இறக்கும்போது அவருக்கு சுமார் 30, 35 வயது இருக்கும் என்றும், அதை மறைப்பதற்காக ஆதார் அட்டை இல்லையென்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்கணவர் எந்த பொறியாளரிடம் கட்டிட மேஸ்திரியாக இருந்தார் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்மாமனார் இருக்கும்போது நாங்கள் தனியாகவும், என்மாமனார் தனியாகவும் இருந்தார் என்றால் சரிதான். என்மாமனார் மற்றும் மாமியார் என்கணவரின் வருமானத்தை நம்பி இல்லை என்றால் சரியல்ல. என்கணவர் ஹெல்மெட் அணியாமல் சென்றதால் தலையில் அடிப்பட்டு இறந்துபோனார் என்றும்,அவர் அன்று ஹெல்மெட் அணிந்திருந்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அதிக நஷ்டஈடு பெறவேண்டி என்கணவரின் வயதை குறைத்தும், வருமானத்தை அதிக படுத்தியும் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. என்கணவர் ஓட்டுநர் உரிமம் இல்லாமலும் மோட்டார் சைக்கிளை ஓட்ட தெரியாமலும், 3 பேரை ஏற்றிக்கொண்டு சென்று விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றால் எனக்கு தெரியாது. விபத்திற்கு என்கணவர் காரணம் என்பதால் எனக்கு நஷ்டஈடு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>:

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.